மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண்.22/2023 நாள்– 28.08.2024

வாதியின் / பிரதிவாதியின் பி.வா.சா.4 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. K.மாரிராஜா, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– தங்கமாரியப்பன்(பி.வா.சா.4) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் சங்கரபாண்டியபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் சொல்லியுள்ள ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். சங்கரபாண்டியபுரம் கிராம சர்வே எண்.578/3B2F யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சங்கன் மகன் நாராயணன் பெயரில் நத்தம் பட்டா எண் உள்ளது. அதன் விஸ்தீரணம் என்ன என்றால் 2 ஏர்ஸ் ஆகும். அதன் கிழமேல் அடி தென்வடல் அடி எத்தனை என்றால் கிழமேல் அடி 10 மீட்டர், தென்வடல் அடி 20 மீட்டர் ஆகும். சுமார் 5 சென்ட் ஆகும். பட்டா எண்.350 நாராயணன் பெயரில் தான் இன்று வரை இருந்து வருகிறது. கிராம சர்வே எண்.578/3B2F 1990 ல் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. கிராம சர்வே எண்.578/3B2B, 578/3B2C, 578/3B2D, 578/3B2E, 578/3B2F, 578/3B2G, 578/3B2H, 578/3B2I, 578/3B2J, 578/3B2K, 578/3B2L உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. 578/3B2C பெருமாள் பெயருக்கும், 578/3B2D பெருமாள்தாய் பெயருக்கும், 578/3B2E அழகர்சாமி பெயருக்கும், 578/3B2F நாராயணன் பெயருக்கும், 578/3B2H காளியம்மாள் பெயருக்கும், 578/3B2I கணேசன் பெயருக்கும், 578/3B2J சுப்பன் பெயருக்கும், 578/3B2K ஆதன் பெயருக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது. பட்டா வழங்கப்பட்ட போது 578/3B2F நாராயணன் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. சர்வே எண். 578/3B2F க்கான பட்டா எண்.350 க்கான

உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அது சாட்சி தரப்பு சான்றாவணம்.1 ஆகும். 578/3B2 உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள்.578/3B2B, 578/3B2C, 578/3B2D, 578/3B2E, 578/3B2F, 578/3B2G, 578/3B2H, 578/3B2I, 578/3B2J, 578/3B2K, 578/3B2L ஒரே அளவு கொண்ட வீடுகளாக காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த வீட்டிற்கு பின்னால் ஒரு காலியிடமும் உள்ளது. சர்வே எண்.578/3B2 உட்பிரிவு செய்வதற்கு முன்பாக ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதி என்று காட்டப்பட்டுள்ளது. சர்வே எண்.578/3B2 உள்ள இடங்கள் ஆதிதிராவிட நல துறை ஒரே ஜாதியை சார்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடமாகும். சர்வே எண்.578/3B2 உட்பிரிவு செய்யப்பட்ட பிறகு உட்பிரிவு இடங்களில் யார் யார் வீடு கட்டி குடியிருந்து வருபவர்களுக்கு நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது. சர்வே எண்.578/3B2F ல் உள்ள இடத்தில் நாராயணன் வீடு கட்டி குடியிருந்து வருவதால் அவர் பெயருக்கு நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் பட்டா வழங்கி இருப்பார்கள். கிராம சர்வே எண்.578/3B2F உள்ள அடங்கல், சிட்டா, கிராம நத்தம் புலப்பட சுவடி, பட்டா எண்.350 நாராயணன் பெயரில் இன்று வரை ஊர்ஜிதத்தில் இருந்து வருகிறது. 1984 ம் ஆண்டு 'அ' பதிவேடு படி சர்வே எண்.578/3B2 உள்ள இடங்கள் ஆதிதிராவிடர் குடியிருப்பு என்று உள்ளது. 'அ' பதிவேடு உண்மை நகல் சாட்சி தரப்பு சான்றாவணம்.2 ஆகும். கிராம நத்தம் புலப்பட சுவடி சாட்சி தரப்பு சான்றாவணம்.3 ஆகும். UDR FMP க்கான உண்மை நகல் சாட்சி தரப்பு சான்றாவணம்.4 ஆகும். FMP அடிப்படையில் என்னால் தயாரிக்கப்பட்ட நான்குமால்களுக்கான ஆவணம் சாட்சி தரப்பு சான்றாவணம்.5 ஆகும்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.